(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(2).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 செப்தெம்பர் 08 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2020 செப்தெம்பர் 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

114/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்தில் உள்ள கிராமங்களுள் —

(i) குடிநீர்ப் பிரச்சினை காணப்படுகின்ற;

(ii) விவசாயத்துக்குத் தேவையான நீரின்றி சிரமப்படுகின்ற;

கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குருநாகல் மாவட்டத்தின் நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

118/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் ஆரம்பக் கட்டத்திற்கான நீரைப் பெற்றுக்கொள்வதற்கு —

(i) மதிப்பிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(ii) ஒப்பந்தம் தற்சமயம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iv) எடுக்கப்படும் காலம் எவ்வளவென்பதையும்;

(v) நிர்மாணப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

124/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வடக்கு மாகாணத்திற்குரிய மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களது பிரதான தொழில்களில் ஒன்றாக கடற்றொழில் அமைந்துள்ளதென்பதையும்;

(ii) ஆயிரக் கணக்கான குடும்பங்கள் அதில் தங்கி வாழ்கின்றன என்பதையும்;

(iii) இந்திய றோலர் படகுகளின் காரணமாக மேற்படி மீனவர்களுக்கு நீண்டகாலமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் பொருட்டு கடலுக்குச் செல்ல முடியாத நிலைமை உருவாகியுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி பிரதேசங்களிலிருந்து கடலுக்குச் செல்லும் இலங்கை மீனவர்களது படகுகளுக்கு இந்தியப் படகுகளால் சேதங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இந்திய றோலர் படகுகளின் சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறுத்தி எமது மீனவர்கள் வழக்கம்போல் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தென்பகுதியைச் சேர்ந்த பெருமளவிலான மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தந்து அங்கு தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர் என்பதையும்;

(ii) அதன் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு தமது கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் தடைகள் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) தென்பகுதி மீனவர்கள் மேற்படி பிரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

156/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடுவல பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு அபாயத்தைக் குறைப்பதற்காக களனி ஆற்றுப் பள்ளத்தாக்கினை அண்டியதாக கருத்திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கருத்திட்டம் யாதென்பதையும்;

(iii) அவ்வாறான கருத்திட்டமொன்று இதுவரையிலும் முன்மொழியப்படவில்லை எனின், அப்பிரதேசத்தின் வெள்ளப்பெருக்கு அபாயத்தைக் குறைப்பதற்காக எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

180/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு, — (1)

(அ) கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சதோச வர்த்தகக் கட்டடமானது முறையான அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த கட்டடம் அமைந்துள்ள காணி எந்த நிறுவனத்திற்குச் சொந்தமானது என்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியானது நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த கட்டடத்தின் தற்போதைய உரிமையாளர் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குறித்த கட்டடத்தை —

(i) நிர்மாணிப்பதற்கான அனுமதியை, உரிய முறைப்படி கரைச்சி பிரதேச சபையிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அரச செலவில் நிர்மாணிக்கப்பட்டதாயின், கேள்வி மனுக்கோரல் மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) நிர்மாணிப்புப் பணிகளுக்கான செலவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

204/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இதய சத்திர சிகிச்சைகள் செய்வதற்காக அரசாங்க வைத்தியசாலைகளில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருடக்கணக்காக காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இச் சத்திர சிகிச்சைகளுக்கு இலங்கையிலும் வெளிநாட்டிலும் தனியார் வைத்தியசாலைகளில் மில்லியன் கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆம் எனில்,

(i) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் அறிக்கையிடப்பட்ட இதயம் தொடர்பான நோய்கள் எத்தனை என்பதையும்;

(ii) கடந்த ஐந்து வருடங்களில் அரசாங்க வைத்தியசாலைகளில் இதய சத்திர சிகிச்சைகளுக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளிகள் எத்தனை பேர் என்பதையும்;

(iii) கடந்த ஐந்து வருடங்களில் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளில் வருடாந்தம் எத்தனை சத்திர சிகிச்சைகள் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தற்போதைய நடைமுறையில் அரசாங்கம் திருப்தி அடைகிறதா என்பதையும்;

(ii) தற்போது நிலவும் இந்நிலைமையை மேலதிக முன்னேற்றத்திற்கான முக்கிய அவதானிப்புகள், சிபாரிசுகள் என்ன என்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

208/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மீன்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மீன்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மீன்களை இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மீன் இறக்குமதி செய்வதற்காக செலவு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

247/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான, கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள ஹந்தானை தோட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் "உதா கம்மான வீட்டு திட்டம்" ஆரம்பிக்கபட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹந்தானை தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள —

(i) ஒவ்வொரு உதா கம்மான வீட்டுத் திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) திட்டத்தில் உள்ளடங்கும் வீடுகளின் எண்ணிக்கை;

தனித் தனியாக யாவையென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) வீடொன்றை நிரமாணிப்பதற்காக வீட்டுப் பயனாளி ஒவ்வொருவருக்கும் —

(i) வழங்கப்படுமென இணங்கிய மொத்தத் தொகை;

(ii) வழங்கப்படும் மொத்தத் தொகையில் கடன் தொகை;

(iii) வழங்கப்படும் மொத்தத் தொகையில் உதவித் தொகை;

(iv) இதுவரை வழங்கப்பட்டுள்ள தொகை;

தனித் தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஒவ்வொரு வீட்டுப் பயனாளிக்கும் உரிய எஞ்சியத் தொகையை வழங்கி இந்த வீட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# 2020 செப்தெம்பர் 23, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

115/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளை மேலும் பலப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

119/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதை நிர்மாணிக்கப்படும் போது சேதமடைகின்ற சொத்துக்களுக்கும் அதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கும் இழப்பீடுகள் செலுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இழப்பீடு பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் உடுபத்தாவ பிரதேச செயலாளருக்கு இன்றளவில் நிதி விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) அத் தொகை விடுவிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

125/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) ஆயினும், இதுவரை அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மன்னார் மாவட்ட விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஐம்பது வீதத்திற்கும் மேற்பட்ட அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் தற்போது 2 வருடங்களாக அதன் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்பதையும்;

(ii) மன்னார் நகர எல்லைக்குள் வருகின்ற எமில் நகர் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பொது விளையாட்டு மைதானத்தின் முதலாம் பகுதியின் மறுசீரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும், அதன் இரண்டாம் பகுதி இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி விளையாட்டு மைதானத்தின் இரண்டாம் பகுதியின் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

157/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) கொலன்னாவை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சில பிரதேசங்கள் சில மணி நேர மழைவீழ்ச்சியின்போது கூட மழை நீரில் மூழ்கின்றன என்பதையும் ;

(ii) அதன் காரணமாக வீதிகளில் நீர் நிரம்பி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது என்பதையும்;

(iii) மழை நீர் வழிந்தோடுவதற்கான சரியான முறைமை காணப்படாதமையே இதற்கான பிரதான காரணம் என்பதையும்;

(iv) இதற்குத் தீர்வாக 25 பிரதான மதகுகளை அபிவிருத்தி செய்வதற்கு கடந்த அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ஐந்தின் பணிகள் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலேயே பூர்த்திசெய்யப்பட்டன என்பதையும் ;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட 25 மதகுகளில் இதுவரையில் அபிவிருத்தி செய்யப்படாத மதகுகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்த அரசாங்கத்திடம் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும் ;

(ii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

342/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) 2018/05/11 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய கணக்காய்வு பரிசோதகர் சேவையின் II ஆம் தரத்திற்கு கணக்காய்வுப் பரிசோதகர் ஆட்சேர்ப்பு – 2018 இற்கான திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி போட்டிப் பரீட்சை 2018 அக்டோபர் மாதம் 14, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சில பரீட்சை நிலையங்களில் நடைபெற்றன என்பதையும்;

(iii) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவிலலை என்பதையும்;

(iv) மேற்படி போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு இதுவரை 2 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளை துரிதமாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறு பெறுபேறுகளை வெளியிட்ட பின்னர் தகைமை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு உரிய நியமனங்கள் துரிதமாக வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

205/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி, கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த திரு. ரம்ஸி ராசிக் தமக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் தொடர்பாக 2020.04.09 ஆம் திகதி காலை மின்னஞ்சல் மூலம் பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதியிடம் முறைப்பாட்டை மேற்கொண்ட அதேநாளில் பிற்பகல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்வதற்கான கட்டளையின்றி கைதுசெய்யப்பட்டிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i ) திரு. ரம்ஸி ராசிக் 2020 ஏப்ரல், 9 ஆம் திகதி முதல் இன்றுவரை கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது ஏன் என்பதையும்;

(ii) அவர் எவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அவருக்கெதிராக முறைப்பாடுகள் ஏதாவது காணப்பட்டனவா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், யார் அத்தகைய முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தார் என்பதையும்;

(v) அவர் ஏதாவது குற்றம் புரிந்திருக்கிறாரா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அத்தகைய குற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) இலங்கையில் 2010 ஆம் ஆண்டிலிருந்து அதே வகையான குற்றத்துக்காக வேறு யாராவாவது ஆட்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனரா என்பதையும்;

(ii) சட்டத்தை அனைவருக்கும் சமமான முறையில் நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் திருப்தியடைகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

209/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கடதாசிகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி கடதாசிகளை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு கடதாசி இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

248/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) கண்டி மாவட்டத்தில், தொலுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான லெவலன்ட் தோட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் “உதா கம்மான வீட்டுத் திட்டம்” ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி திட்டத்தின் கீழ் மேற் குறிப்பிட்ட தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள —

(i) உதாகம்மான வீட்டுத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ஒவ்வொரு வீட்டுப்பயனாளிக்கும் —

(i) வழங்கப்படுவதாக இணக்கம் தெரிவிக்கப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) வழங்கப்படும் முழுத் தொகையில் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) வழங்கப்படும் முழுத் தொகையில் உதவித் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இதுவரை வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஒவ்வொரு வீட்டுப் பயனாளிக்கும் உரித்தான நிலுவைத் தொகையினை வழங்கி, இத் திட்டத்தை பூர்த்திச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

54/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) பதுளை மாவட்டத்தில், நெடுஞ்சாலைகள் நிரல் அமைச்சிற்கும், ஊவா மாகாண சபைக்கும் மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சொந்தமான வீதிகளின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள் என்பதை தனித்தனியாகவும்;

(ii) மேற்படி வீதிகளில் தற்போது பழுதடைந்துள்ள வீதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது பழுதடைந்துள்ள வீதிகளின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள் என்பதையும்;

(iv) அவ்வாறு பழுதடைந்துள்ள வீதிகளை துரிதமாக புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

97/2020

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1 )

(அ) (i) இந்திய அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்புடன் இலங்கையை இணைக்கும் திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது நடைமுறைக்கு வரும் திகதி யாதென்பதையும்;

(iii) இலங்கை அரசாங்கம் அதற்காக செலவிட எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தினால் இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய ஒவ்வாத கலாசார மற்றும் சமூக ரீதியான மாற்றங்கள் தொடர்பில் புலமைசார் ஆய்வொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த ஆய்வின் விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

## 2020 செப்தெம்பர் 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

116/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,—போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு டிப்போக்களிலும் தற்சமயம் சேவையில் ஈடுபடுவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போக்களிலும் உள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) குருநாகல் மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் பேருந்து தொகுதிகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

120/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதையை அபிவிருத்தி செய்வதற்குரிய கருத்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துக்கு குறித்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறை யாதென்பதையும்;

(iii) அதற்கான ஒப்பந்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தத்திற்கான பணிகளை நிறைவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

126/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதான குளங்களில் ஒன்றான நஞ்சுண்டான் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கான கடந்த அரசாங்கத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக பெய்துவந்த மழையின் காரணமாக குறிப்பிட்ட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் ஒதுக்கமானது திருப்பியனுப்பப் பட்டுள்ளது என்பதையும்;

(ii) இக்குளத்தின் நீரைப் பெறுகின்ற பெருமளவிலான வயல்களும் மேட்டு நிலங்களும் காணப்படுவதோடு கிராமிய மக்கள் தமது வாழ்வாதாரத்தின் பொருட்டு இக்குளத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதையும்;

(iii) நஞ்சுண்டான் குளக்கட்டிலுள்ள அநாவசியமான மரங்களை வெட்டி அகற்றுவதற்கு மரக் கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் போக்குவரத்துக்கான வீதி சேதமடைந்துள்ளதனால் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி நஞ்சுண்டான் குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) போக்குவரத்துக்கான வீதி புனரமைக்கப்பட்டு, மேற்படி குளத்தின் புனரமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

158/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவிற்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றதான வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக ஐந்து நீர் இறைக்கும் பம்பியறைகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த ஐந்து பம்பியறைகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவானது ஒவ்வொரு பம்பியறையின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஐந்து பம்பியறைகளில் தற்போது முழுமையாக பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பம்பியறைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) பணிகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள ஒவ்வொரு பம்பியறையினதும் பணிகள் பூர்த்தி செய்யப்படவுள்ள திகதிகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

343/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு, — (1 )

(அ) (I) இன்றளவில் இலங்கையில் பயிர்ச் செய்கை மேற்கொள்கின்ற மொத்த வயற் காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அவற்றுள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயற் நிலங்களின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (I) தற்போது இலங்கையிலுள்ள தரிசு காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அவை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்துவதற்கான திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) பயிரரச்செய்கைக்குத் தேவையான விதைகள் மற்றும் உரம் போன்றவற்றை உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பயிரரச்செய்கைக்குத் தேவையான இயந்திர சாதனைகள் சலுகை விலை அடிப்படையில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இளந்தலைமுறையினர் கமத்தொழிலில் ஈடுபடாமையின் காரணமாக ஏற்பட்டுள்ள ஊழியப்படை குறைவினை நிவர்த்தி செய்வதற்காக கவர்ச்சிகரமான திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

210/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சீனி எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி சீனியை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சீனி இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

249/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு, —(1 )

(அ) கண்டி மாவட்டத்தின் பன்வில பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கெலாபொக்க தோட்டத்தில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் "உதா கம்மான வீட்டு திட்டம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள;

(i) உதா கம்மான வீட்டுத்திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) உதா கம்மான வீட்டுத்திட்டம் ஒவ்வொன்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒவ்வொரு பயனாளிக்கும்;

(i) வழங்குவதாக இணங்கிய மொத்த நிதித்தொகை;

(ii) வழங்கப்படும் மொத்த தொகையில், கடன் தொகை;

(iii) வழங்கப்படும் மொத்த தொகையில், உதவித் தொகை;

(iv) இதுவரையில் செலுத்தப்பட்டுள்ளதொகை;

வெவ்வேறாக எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஒவ்வொரு பயனாளிக்குமான எஞ்சிய நிதித்தொகையை வழங்கி, இக்கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

55/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள கிராமங்களில், குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இக் கிராமங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

98/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பூகோள காலநிலை மாற்றங்கள் காரணமாக இலங்கையின் காலநிலையில் எதிர் மறையான தாக்கங்கள் ஏற்படுவதையும்;

(ii) அது இலங்கையின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் ஏனைய துறைகளில் நேரடியான தாக்கத்தைச் செலுத்துவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பூகோள காலநிலை போக்குகள் இலங்கைக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விதம் தொடர்பில் புலமைசார் ஆய்வொன்றை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த ஆய்வின் விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு புலமைசார் குழுவொன்று நியமிக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

122/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தென்னை மரங்கள் அகற்றப்படும்போது அவை பெற்றுக் கொடுக்கப்பட்ட தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கெனப் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iv) தென்னை மரமொன்றுக்காக வழங்கப்பட்ட விலை எவ்வளவென்பதையும்;

(v) அதன் மூலம் ஈட்டப்பட்ட பணத்தொகையானது தற்போது எந்த நிறுவனத்தின் வசமுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2020 செப்தெம்பர் 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

117/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் கடமையாற்றிய/கடமையாற்றுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முகவரி, மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள் தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இக்காலத்தில் இவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் பிற சலுகைகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்த அவர்களது நிர்வாக காலத்தில் தவறிவிட்டனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கையில் கிரிக்கட் விளையாட்டை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

121/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்குரியதாக இதுவரை கைச்சாத்திடப் பட்டுள்ள முதலீட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளில் இன்றளவில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

127/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் நிலவிய பயங்கரவாதம் முடிவடைந்து பத்து வருடங்கள் கடந்துள்ள போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கிளிநொச்சி முல்லைத்தீவு A 50 பிரதான வீதியில் அமைந்துள்ள பிரதான பாலமாகிய 402 மீற்றர் நீளமான வட்டுவாகல் பாலம் இதுவரை எதுவித புனரமைப்பும் செய்யப்படாமல் ஒரு வாகனம் மாத்திரம் பயணிக்கக்கூடியவாறு சேதமடைந்த சிறியதொரு வீதியாக இருப்பதனால் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இது தொடர்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் நான் பல சந்தர்ப்பங்களில் இந்த சபையில் குறிப்பிட்டுள்ள போதிலும் அது தொடர்பில் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வட்டுவாகல் பாலத்தை இருவழிப் பாதையாக மீண்டும் புனரமைத்து மக்கள் வழமைபோல் போக்குவரத்துச் செய்வதற்காக திறந்துவைக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

159/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் மீதொட்டமுல்லை குப்பை மேடு சரிந்ததால் உயிர்ச் சேதங்கள், வீடுகள் மற்றும் வாகனங்கள் பாதிப்புக்குள்ளாகியது என்பதையும்;

(ii) அதன்போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் வீடுகளுக்கான நட்ட ஈட்டுத்தொகை வழங்க முடிந்ததென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மீதொட்டமுல்லை குப்பை மேடு சரிந்ததால் சேதத்துக்குள்ளான வாகனங்களுக்கா —

(i) நட்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) நட்ட ஈடு வழங்கப்படும் முறைமை யாதென்பதையும்;

(iii) நட்ட ஈட்டைக் கோரி கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) நட்ட ஈடு வழங்குவதற்காக அரசாங்கத்தால் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அம்மதிப்பீட்டுக்கு அமைவாக நட்டஈடு வழங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நட்ட ஈடு வழங்கப்படாத வாகனங்களுக்காக நட்டஈடு வழங்கப்படும் திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

344/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேயிலை சக்தி நிதியத்தில் ஆரம்பம் தொடக்கம் இதுவரையில் உள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இந்நிதியத்தின் மூலமாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) தேயிலை சக்தி நிதியத்தின் ஆரம்பம் தொடக்கம் இதுவரை அங்கத்துவம் பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இந்நிதியத்திற்கு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களால் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேயிலை சக்தி நிதியத்தின் மூலமாக தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) அதற்கென செலவிடப்படுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்?

(v) தொழிற்சாலைகளுக்கென முதலீடு செய்யப்பட்ட பணத்தொகையினால் ஏதேனும் இலாபம் கிடைக்கின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி இலாபம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

211/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அலுமினியத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அலுமினியம் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி அலுமினியத்தினை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு அலுமினியம் இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

250/2020

கௌரவ வேலுகுமார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) கண்டிமாவட்டத்தின் தெல்தெனிய பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான வைத்தலாவ தோட்டத்தில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் "உதா கம்மான வீட்டு திட்டம்" ஆரம்பிக்கபட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள —

(i) ஒவ்வொரு உதா கம்மான வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை;

(ii) திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ஒவ்வொரு பயனாளிக்கும்;

(i) பெற்றுத்தருவதாக இணங்கிய தொகை;
(ii) பெற்றுக்கொடுக்கப்படும் மொத்தத் தொகையில் கடன் தொகை;
(iii) பெற்றுக்கொடுக்கப்படும் மொத்தத் தொகையில் உதவித் தொகை;
(iv) இற்றைவரையில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள தொகை;

தனித்தனியே எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஒவ்வொரு பயனாளிக்கும் எஞ்சிய பணத்தை பெற்றுக்கொடுத்து இக்கருத்திட்டத்தை பூர்த்திச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

57/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) குருநாகல் போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்டர் சாபி எனும் மருத்துவர் சிங்களப் பெண்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டாரென குற்றச்சாட்டுகள் எழுந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் இவருக்காக ஆஜராகிய சட்டத்தரணிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மருத்துவருக்கு எதிராக இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இந்த மருத்துவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு பாதிப்புக்குள்ளாகிய தாய்மாருக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

99/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வில்பத்து தேசிய வனப்பூங்காவை முதன்மையாகக் கொண்ட வனப்போர்வை மனித செயற்பாடுகள் காரணமாக அழிவடைகிறது என்பதையும்;

(ii) வடமத்திய மாகாணம் ஏற்கனவே பகுதியளவில் பாலைவனமாக மாறியுள்ளது என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது இலங்கையின் ஒட்டுமொத்த காலநிலையினையும் பாதித்துள்ளது என்பதையும்;

(iv) ஆகையால், இலங்கையில் தொடர்ச்சியாக யாதேனும் ஒரு பிரதேசம் வெள்ளம், வறட்சி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக புத்திஜீவிகள் குழுவொன்றின் வாயிலாக ஆய்வொன்றினை மேற்கொள்வது உகந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

123/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்கென இலங்கை முதலீட்டுச் சபையினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அக்காணிகள் கையகப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அக்காணிகளுக்காகச் செலுத்தப்பட்ட பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(v) அக்காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறை யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணிகளில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதும் அவற்றுக்கான விளைச்சல்களைப் பெறுகின்றதுமான நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைகுத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

303/2020

கௌரவ (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழக மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டிற்கான ஒரு இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டுள்ள பின்னணியில் —

(i) இலங்கையில் பல்வகை திறந்த பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நோக்கம் கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) உயர் கல்வியினை பெறுவதற்கு எதிர்பார்க்கும் எவ் வகுதியினரை இலக்குவைத்து தொலைக்கல்வி வசதிகளை விரிவாக்குவதற்கு அரசு நோக்கம் கொண்டுள்ளதென்பதையும்;

(iii) தொலைக் கல்வி வாய்ப்புகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கு எதிர்காலத்திலும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் நிதியத்தின் கீழ் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் தொடர்ந்தும் செயற்படுகின்றதா என்பதையும்;

(ii) இல்லையெனில், அது எந்த அதிகார முறைமைக்கு உட்படுத்தப்படுமென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பணிகளுக்ககாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) பல்கலைக்கழகத்திற்காக உறப்படும் செலவினத்தில் அரசின் பங்களிப்பு எவ்வளவு என்பதையும்;

மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?